# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM
## Case No: CC. 949/2022
## Prosecution Witnesses : 1

| | | | |
|---|---|---|---|
| Name | : கோபாலகிருஷ்ணன் | Caste | : |
| Father 's Name / Husband Name | : இருளப்பன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)

**(12.03.2026)**

**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது சோளங்குருணியில் குடியிருந்து வருகிறேன். நான் செண்ட்ரிங் வேலை செய்து வருகிறேன். நானும் எதிரிகளும் தற்போது சமாதானம் ஆகிவிட்டோம். நான் கடந்த 01.07.2022 அன்று காலை சுமார் 10.00 மணியளவில் யாரோ சிலர் எங்களது தோட்டத்தில் செடிகளை வெட்டிக் கொண்டிருந்தனர்,. அதற்கு எனது அப்பா அந்த நபர்களை ஏன் செடிகளை வெட்டுகிறீர்கள் என்று கேட்டதற்கு அடையாளம் தெரியாத நபர்கள் எனது அப்பாவை பார்த்து அசிங்கமாக பேசி தள்ளிவிட்டார்கள். இதனை கேட்க போன என்னை சில அடையாளம் தெரியாத நபர்கள் என்னை கீழே தள்ளியதால் கல்பட்டு தலையில் காயம் ஏற்பட்டது. பின்பு அடையாளம் தெரியாத எதிரிகள் அக்கம் பக்கம் ஆட்கள் வரவும் ஓடிவிட்டார்கள். நான் எனக்கு ஏற்பட்ட காயத்தின் காரணமாக வலைளயங்குளம் மருத்துவமனையில் முதல் உதவி செய்து விட்டு பின்பு மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் வெளிநோயாளியாக சிகிச்சை எடுத்துக் கொண்டேன். பின்னர் நான் பெருங்குடி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன்.

என்னிடம் காண்பிக்கப்படும் கையெழுத்து என்னுடையது தான். **சந்தேகத்தின் அடிப்படையில் எதிரிகள் மீது நான் கொடுத்த புகார் அ.சா.ஆ.1 ஆகும்**. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.** இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC. 949/2022**
**Prosecution Witnesses : 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : இருளப்பன் | Caste | : |
| Father 's Name / Husband Name | : சின்னசாமி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(12.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது சோளங்குருணியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். நானும் எதிரிகளும் தற்போது சமாதானம் ஆகிவிட்டோம். நான் கடந்த 01.07.2022 அன்று காலை சுமார் 10.00 மணியளவில் யாரோ சிலர் எங்களது தோட்டத்தில் செடிகளை வெட்டிக் கொண்டிருந்தனர்,. அதற்கு நான் அந்த நபர்களை ஏன் செடிகளை வெட்டுகிறீர்கள் என்று கேட்டதற்கு அடையாளம் தெரியாத நபர்கள் என்னை பார்த்து அசிங்கமாக பேசி தள்ளிவிட்டார்கள். இதனை கேட்க போன அ.சா.1 ஐ சில அடையாளம் தெரியாத நபர்கள் கீழே தள்ளியதால் கல்பட்டு அ.சா.1 க்கு தலையில் காயம் ஏற்பட்டது. பின்பு அடையாளம் தெரியாத எதிரிகள் அக்கம் பக்கம் ஆட்கள் வரவும் ஓடிவிட்டார்கள். அ.சா.1 க்கு ஏற்பட்ட காயத்தின் காரணமாக வலைளயங்குளம் மருத்துவமனையில் முதல் உதவி செய்து விட்டு பின்பு மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் வெளிநோயாளியாக சிகிச்சை எடுத்துக் கொண்டார். பின்னர் பெருங்குடி காவல் நிலையம் சென்று அ.சா. 1 புகார் கொடுத்தார். என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ.1 ல் உள்ள

அறிவேன் சாட்சிக் கையெழுத்து என்னுடையது தான். **அந்த அறிவேன் சாட்சிக்கையெழுத்து அ.சா.ஆ.2 ஆகும்**. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.** இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC. 949/2022**
**Prosecution Witnesses : 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : **ஆண்டாள்** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **இருளப்பன்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(12.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது சோளங்குருணியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மகன் ஆவார். அ.சா.2 எனது கணவர் ஆவார். எனக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது. நாங்கள் எதிரிகளும் தற்போது சமாதானம் ஆகிவிட்டோம். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.** இல்லை